திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மின் இறைப்பான்கள் செப்பனிடப்பட்டு 9 மின் இறைப்பான்கள் இன்னும் செப்பனிடப்படாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1 வருடம், 2 வருடம் என்று இப்படி வருடக்கணக்கில் இருக்கிற காரணத்தால், குடிதண்ணீருக்காக மக்கள் மிகவும் அவதிப்படுகிற நிலையிருக்கிறது. ஆகவே, உடனடியாக அவற்றைப் பழுதுபார்த்து மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே, விரைவிலே, அவைகளை ரிப்பேர் செய்வதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

ஐயாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 806—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் பாதர்பேட்டை அருகே ஐயாற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் ஆய்வு செய்து அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. கே இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) சுமார் 5,100 ஏக்கர் நிலங்களுக்கு புஞ்சைப் பாசன வசதி அளிக்கும்படியான இத்திட்டம் விரிவான ஆய்வில் உள்ளது என தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 5,100 ஏக்கர் புஞ்சை நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரும் திட்டத்தின் கீழ், அணைக்கட்ட பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பரிசீலனை எந்த அளவில் இருக்கிறது? பரிசீலனை முடிந்து இந்த ஆண்டே மேற்படி அணையைக் கட்டும் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இத்திட்டம் பற்றிய தள அளவிலான, விரிவான ஆய்வுகள் 'இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலே' தானிருக்கின்றன. அது முடிந்ததற்குப் பிறகுதான் அதன்மீது முடிவு எடுக்கப்படும். ஆனால், பொதுவாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஓரளவுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொட்டகுடி ஆற்றில் அணை கட்டும் திட்டம்.

* வினா எண். 807—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடித் தொகுதியில் கொட்டகுடி ஆற்றில் கொம்புதூக்கி அருகில் அணை கட்ட அரசினால் ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) வைகை சுருளியார் படுகையின் நீரியல் ஆய்வின்படி கொட்டகுடியாற்றில் அணைகட்டி போடி பகுதி நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப் போதுமான உபரிநீர் இல்லாததால், இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு இல்லை என தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

போளூர் வட்டாரத்தில் புதிய தாதுப் பொருள்கள்.

*வினா எண். 808 :—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழில்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் வட்டாரத்தில் புதிய தாதுப்பொருள்கள் யாது கிடைக்கின்றன?

(ஆ) இது குறித்து அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :—(அ) மற்றும் (ஆ) : வடஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் அண்மைக் காலத்தில் புதிய கனிப்பொருள்கள் எதுவும் கிடைக்கவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாதிரி ஒரு செய்தி கிடைத்த காரணத்தாலேதான் இந்த வினாவே எழுப்பப்பட்டது. அண்மையிலே